# ஜிதந்தே தோத்திரம்.

## தமிழாக்கம் : பொய்கையடியான்.






ஜிதந்தே என்பது சாஸ்திரங்களாலும்புராணங்களாலும் போற்றப்படும் ஒரு மஹாமந்திரம் சுவேதத்வீப வாசிகளால் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய சௌந்தர்யம் முதலியவற்றில் மயங்கி ஈடுபட்டுச் சொல்லும் ஸ்தோத்திரம்ஒருசமயம் அங்கு சென்ற நாரதமுனி அங்குள்ள ரிஷிகள் முலம் கற்று பிறகு இந்த உலகிலுள்ளோர் பயனடைய உபதேஸித்தாஅதனை இந்த அடியவன் எம்பெருமானின் கருணையுடன் தமிழில் வழங்கும் பேறுபெற்றேஇது ப்ரபத்தி என்று கூறப்படும் சரணாகதிக்கு வியாக்யானமாய் அமைந்தது

செந்தாமரைக்கண்ணா ! எனது ஆத்மா உன்னால் வெல்லப்பட்டது ,

உலகமெல்லாம் நீயே படைத்தாய், ஆத்மா எனக்கு சொந்தமல்ல ;

நந்தாவிளக்கே இந்திரியங்களை வசப்படுத்தியவனேமுன்னானவனே

விலக முடியாமல் இவ்வாத்மாவை ஸ்திரமாக உனதாக்கிக்கொள் . 1.

எம்பெருமானிடம் பக்தியுள்ள தேவர்களும், பக்தியற்ற அசுரர்களும் ,

சமமாக எப்போதும் பற்றிடுவதற்கு எளிதான மேன்மைமிகுந்தான ;

உம்முடையகமல மலர்போன்ற திருப்பாதங்களையே என்றென்றும் ,

சமய வரம்பான நிலையில் சேர்த்திடும் உபாயமாக மதித்திடுவேன் . 2.

அனைத்துவுலகங்களையும் படைக்கும் ஒரே காரணகர்தாவாயிருந்து ,

பின்பு அவற்றையெல்லாம் அழிக்க நினைப்பவராகவும் நீரேயிருந்து ;

CONFIDENTIAL

அனைத்து அடியவர்களின் துன்பம் நீக்கி, அவர்கள் கருமம் செய்திட ,
அன்புடன் அனுமதியும் தந்து, முக்குணமுடையவற்கு மறைக்கபட்டீர் . 3.
அரம்போன்று மிக்கக்கொடியவையான இந்த சம்சாரமென்ற கடலும் ,
மண்டி கிடந்திடும் பெரும்துயரங்கள் என்றுமளக்க முடியாதவையாம் ;
அறத்திற்கு கடலாய் தட்பத்தையுடைய நின்தன் கமலத்திருவடிகளை ,
மண்டியிட்டவர்கள் அதனைக்கடந்து முக்தியெனும் கரைசேர்ந்திடுவர் . 4.
திவ்ய ஆத்ம ஸ்வரூபமும், நின்தனுடைய திவ்யமங்கள விக்ரஹமும் ,
உனக்காக ஏற்பட்டனவையல்ல, பரமபதம் என்ற இருப்பிடம், உன்தனது ;
திவ்ய ஆயுதங்களும் கூட உன் அடியார்களுக்காகவே இருப்பனவாகும் ,
உனக்குறிய அனைத்துமே உம் அடியார்களுக்கே சொந்தமாக ஆகின்றன 5.
கண்களுக்குப் தோன்றாமல் மறைந்திருப்பது என உனக்கு எதுவுமில்லை ,
ஒருவருடைய முன்பும் உன் திருவுருவம் தோன்றுவதில்லை இது உறுதி ;
எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட உன்னால் செய்யமுடியாதது எதுவுமில்லை ,
ஒருவர் நினைத்துச் செய்கின்ற முயற்சிகளுக்கு அடையக் கூடியவனாகாய் 6.
ஆதிகாரணமாக அனைத்துக் காரியங்களுக்கும் காரணமாக இருக்கின்றவனும் ,
மேன்மையான சொற்களும் அவற்றிற்கெல்லாம் பொருளாக இருக்கின்றவனும் ;
ஆதியானவனும் உயர்ந்த பரமபதமாகவும் மேலான சித்தியும் நீயேஆகின்றாய் ,
மேன்மையான வேதங்கள் அறிந்தவரும் இதனையே ஆமோதிப்பர் அன்றோ . 7.
நித்யசூரிகளின் தலைவரானவரே சம்சாரபயத்தால் அடியேன் அச்சமடைந்தேன் ,
சரணமென்று உமையடைந்தவரைக் கைவிடாதவரே, செந்தாமரைக் கண்ணனே ;
சத்தியமான உம்மைத்தவிர உற்ற புகலானவர் என்று எவருமே இங்கில்லை ,
அரண்போன்று இருந்து அடியேனுக்கு அபயமளித்துக் நீரே காத்திட வேண்டும் . 8.
அடியவரை என்றும் நழுவவிடாதவரே எல்லாப்புண்ணிய காலங்களிலும் ,

CONFIDENTIAL

அடியவர் தொழுவதற்கு உகந்த புண்ணிய பூமியில் எல்லா திசைகளிலும் ;

செடிபோன்று தழைத்து வளரும், தர்மத்திற்கு சாதனமான இவ்வுடலிலும் ,

கொடியபயம் எந்தன்மனதை ஆட்கொள்வதற்கு அடியேன் என்னசெய்வேன் . 9.

எம்பெருமானிடம் பக்தி ஏற்பட, தெரிந்தோ தெரியாமலோ செய்த நற்செயல் ,

நல்லகதியை அடைய விரும்பும் அடியேனுக்கு காரணம் நின் திருவடிகளே ;

உம் திருவருள் அன்றி வேறு ஒரு அன்னியமான காரணம் தான் உளதோ ,

வெல்ல ஆயிரம் சென்மம் பெற்றாலும், பற்ற உன்னைத்தவிர புகலில்லை . 10.

உபாயமும், உபேயமும் நீயே என்ற எண்ணம் எனக்கு உண்டாகியிருந்தால் ,

அறிவு குறையாத வழியைநாடி தரித்திரனாகிய எனக்கு பிறவி எதிலேனும் ;

உபாயமான அந்த அறிவை அடியேன் பறிகொடுக்காத அந்த தன்மைகளை ,

செரிவுடன் தந்து அன்புடன் எனக்கு அருள்மழை பொழிந்திட செய்வாயாக . . 11.

திருவடிகளின் மீதுள்ள விருப்பத்தினால் அடியேனுடைய மனோரதங்கள் ,

கடைநிலையான சம்சாரமென்ற துர்கதிநிலை அடியேனுக்கு ஏற்பட்டாலும் ;

உருமாறாமல் நிலையாய் உம்மிடமே நிலைத்திருக்குமாயின் மிக மகிழ்ச்சி ,

தடையின்றி அந்த ஒரு மனோரதமே ஒதுங்குவதற்குறிய எல்லையற்றது . 12.

நின்தன் திருவடிகளில் நிலைத்து நிற்கும் அடியேனுடைய மனமானது ,

ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் உலக ஆசைகளில் மயங்கிவிடாமல் ;

என்தனுக்கு வரக்கூடிய பிறப்புகளிலெல்லாம் ஆன்மாவின் சொரூபமான ,

ஒன்றேயாக உள்ள வைணவன் என்ற செல்வத்தையே விரும்பிடுவேன் 13..

கொவ்வைக்கனிவாயுடன் கூடியதான நம் பரம புருஷனை அவனது ,

உயர்விலும் அழகிலும் ஈடுபட்டு துதித்து அவனுக்கே அடிமையாகி ;

செவ்வையாக இருந்து பொறாமை என்மனதில் சமீக்காதவாறு செய்து ,

அயர்வின்றி மனதினில் வேரூன்றிய ஆன்மாவை சமர்பிக்கின்றேன் 14.

CONFIDENTIAL